


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற உலக போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணியை நாகர்கோவில், எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (27.06.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 401/2016 நாள்: 27.06.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற உலக போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணியை இன்று (27.06.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, போதை பழக்கத்தினால் ஏற்படும் தீமைகள் மற்றும் உடல்நல குறைவு ஆகியவற்றை குறித்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த காவல்துறை, பள்ளிக்கல்விதுறை மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற உலக போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணியை நாகர்கோவில், எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் கொடியசைத்து இன்று (27.06.2016) துவக்கி வைத்து, தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 26-ம் தேதி உலக போதை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களிடம் போதை பொருள் பயன்படுத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், காவல்துறை மற்றும் பள்ளிக்கல்விதுறை, இந்தியன் ரெட்கிராஸ், யூத் ரெட்கிராஸ், ஜீனியர் ரெட்கிராஸ் போன்ற அமைப்புகள் மூலம் சுமார் 550 பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொாண்ட உலக போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது. பேரணியில் "போதை பொருளை ஒழிப்போம் வாழ்வை காப்போம், போதையின் பாதை மரணத்தின் பாதை, போதை பொருளை ஒழிப்போம் நாட்டை காப்போம், இளமையின் போதை இன்பம், முதுமையின் வரை நீடிப்பதில்லை, போதை பொருள் உடல் நலத்திற்கு கேடு" போன்ற விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி, நாகர்கோவில் எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் துவங்கி, டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வேட்டாளி அம்மன் கோவில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம் வழியாக சென்று மீண்டும் எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளி வந்து நிறைவடைந்தது.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார், தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் திரு. ஏ. ஜஸ்டின் செல்வராஜ், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ச.மதியழகன், போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. எஸ். கமலி, நாகர்கோவில் கல்வி மாவட்ட அலுவலர் திரு. எஸ். ஜாண் பெர்க்மான்ஸ், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. எ. வி. மூர்த்தி, பள்ளி தலைமையாசிரியர் (எஸ்.எல்.பி.) திரு. சி. விஜயன், உதவி ஆணையர் (ஆயம்) திரு. எ. காளிமுத்து, டாஸ்மாக் பொது மேலாளர் திருமதி. செல்வமணி, மரு. நாகேந்திரன், திரு. அகமதுகான் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.